பக்கங்கள் 4 Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 ஐப்பசி 29 புதன்கிழமை (15-11-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 344

# மிகப் பெரும் தாக்குதலுக்கு புலிகள் தயாராகுகின்றனர்!

## உச்சப் பலத்தைப் பிரயோகிக்க அரசாங்கப் படைகளும் முயற்சி

கொழும்பு, நவம்பர் 15

யாழ்ப்பாண நகரை நோக்கி முன்னேற முயலும் ஸ்ரீலங்காப் படைகள் மீது மிகப் பெரும் தாக்குதல் ஒன்றைத் தொடுப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாக பாதுகாப்பு விமர்சகர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இப்போரில் தமது உச்சப்பலத்தைப் பயன்படுத்த ஸ்ரீலங்காப் படைகளும் முயற்சித்து வருவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இருபாலை, கோண்டாவில் பகுதிகளில் இருந்து மேலும் முன்னேற முயற்சிக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் தற்போது மேலும் தீவிரமடைந்துள்ளதாக யுத்த முனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னேற்ற நடவடிக்கையில் ஈடுபடும் படையினர் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் ஒப்புக்கொண்டிருக்கின்றார்.

இந்நிலையிலேயே — புலிகள் மிகப்பெரும் தாக்

(4 ஆம் பார்க்க பார்க்க)

## யுத்த சூனிய பிரதேசமாக யாழ். நகரம்

யாழ் நகரப் பகுதி மக்கள் நடமாட்டம் அற்ற பெரும் சூனியப் பிரதேசமாகக் காட்சியளிக்கிறது

நகரப் பகுதிகளில் எஞ்சியிருந்த சிலரும் நேற்று அங்கிருந்து வெளியேறிவிட்டதை அடுத்து அச்சமூட்டும் வகையிலான மயானப் பகுதிபோல் யாழ். நகரம் காட்சியளித்தது.

## யாழ். நகரை நோக்கி அகோர ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், நவ. 15

கோண்டாவில், இருபாலைப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று முன்தினம் இரவும் நேற்றுப் பகலும் நகரை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நல்லூர், கந்தர்மடம், நல்லூர் கந்தசுவாமி கோவில் பகுதி, கொக்குவில் ஆகிய பகுதிகளை நோக்கி படையினர் மேற்கொண்டதாக்குதல்களால் பொதுமக்களின் வீடுகள் சொத்துக்ள் பெருமளவில் நாசமாகின.

நகரை அதிர வைக்கும் வகையில் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றதாக யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (உ-3)

## நல்லூர் சங்கிலியன் வீதியில் ஷெல்லுக்கு இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், நவ. 15

நேற்று மாலை ஐந்து மணியளவில் ஸ்ரீலங்காப் படையினர் ஏவிய ஷெல் நல்லூர் சங்கிலியன் வீதியில் வீழ்ந்து வெடித்ததில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

நல்லூர் சங்கிலியன் வீதியில் — பண்டாரக்குளம் பிள்ளையார் கோவில் பகுதியில் — வீழ்ந்த ஷெல்லுக்கு அப்பகுதிக்குச் சென்ற ஓட்டோ சாரதியான தர்மலிங்கம் சுகந்தன் (19 வயது) என்பவர் இரையானார்.

நல்லூர் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லால் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம், புறோமோட்டஸ் நிறுவனம் ஆகியன சேதம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# படை நடவடிக்கைக்காக 3 நவீன ரஷ்ய ஹெலிகள்

## கொழும்பில் தயார் நிலையில்

ரஷ்யத் தயாரிப்பான எம் 124 ரகத்தைச் சேர்ந்த நவீன ஹெலிக்கொப்டர்கள் மூன்றை ஸ்ரீலங்கா விமானப் படை முதன்முறையாகக் கொள்வனவு செய்துள்ளது

குடா நாட்டில் தற்போது மேற்கொள்ளப் பட்டுவரும் பாரிய இராணுவ நடவடிக்கையில் பயன் படுத்துவதற்காக அவசரமாக இந்த மூன்று ஹெலிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கொழும்புக்கு கொண்டுவரப்பட்ட இந்த மூன்று ஹெலிகளும் வடபகுதி போர் நடவடிக்கையில் பயன்படுத்த தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் —

சக்தி வாய்ந்த பீரங்கிகள் பொருத்தப்பட்ட இந்த நவீன ஹெலிக்கொப்டர்கள் கப்பல்களில் இருந்து ஆகாய வழியாகத் தாக்குதல் நடத்தக் கூடியவை என்றும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இந்த மூன்று ஹெலிகளுடன் புதிதாக ஆறு இஸ்ரேலிய ஜெட் விமானங்களும் ஆறு டோறா அதிவேகப் பீரங்கிப் படகுகளும் வடபகுதி இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3-6)

## கல்முனைக் கடலில்

# படையினர் சூட்டுக்கு இரு மீனவர்கள் பலி!

## மற்றொருவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், நவ. 15

தனங்கிளப்பிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு மீனவர்கள் கொல்லப்பட்டனர்.

கல்முனைக் கடற்பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குருகநரில் இருந்து இடம் பெயர்ந்து தனங்கிளப்புப் பகுதியில் குடியேறியிருந்த மூன்று மீனவர்கள் கடந்த திங்கட்கிழமை மீன் பிடிப்பதற்காக படகில் சென்றனர் என்றும் —

நேற்று வரை அவர்கள் திரும்பாததை அடுத்து அவர்களைத் தேடிச் சென்ற அவர்களின் இனத்தவர்கள் இருவரின் சடலங்களைக் கண்டு பிடித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குருநகரைச் சேர்ந்த எம். கிங்சக் கிளப் (18 வயது), அன்னப்பட்டு (36 வயது — 3 பிள்ளைகளின் தந்தை) ஆகியோரின் சடலங்கள் பெரிய வேலி என்னும் இடத்தில் வைத்து மீட்கப்பட்டு சாவகச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு நடவடிக்கைகளை தடுக்கக் கோரும்

# தொண்டு நிறுவன கூட்டத்தை நிறுத்த கோரி சிங்கள இனவாதிகள் கூச்சல்!

## யுக்திய ஆசிரியர் நையப்புடைக்கப்பட்டார்

கொழும்பு, நவ. 15

வடக்கில் ஸ்ரீலங்காப் படைகள் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளினால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் தெற்கில் நடத்தவிருக்கும் கூட்டத்தை குழப்புவதற்கு சிங்கள இனவாதக் கும்பல்கள் முனைந்து நிற்பதாக அறிவிக்கப்படுகின்றது.

அதன் ஒரு நடவடிக்கையாக —

இக்கூட்டம் நடைபெறவிருக்கும் பெந்தோட்டை பீச் ஹோட்டலின் முன்னால் நேற்றுக் கூடிய — ஐம்பது பேரடங்கிய — சிங்கள இன வெறிக் கும்பல் ஒன்று இக் கூட்டத்தை ரத்துச் செய்யுமாறு கோரி அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்றைநடத்தியது. அந்த ஆர்ப்பாட்டம் பற்றிய செய்திகளைச் சேகரிக்கச் சென்ற 'யுக்திய' பத்திரிகையின் ஆசிரியர் சுனந்த தேசப்பிரியவை அக்கும்பல் தாக்கி நையப்புடைத்தது.

அகதிகளுக்கான பிரிட்டிஷ் உதவி அமைப்பின் ஏற்பாட்டில் மேற்படி அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டம் இன்றும், நாளையும், நாளை மறுதினம் நடைபெறவிருக்கின்றது.

பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள வடபகுதி இராணுவ நடவடிக்கையை உடன் நிறுத்துமாறு ஸ்ரீலங்கா அரசைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# எண்ணெய் களஞ்சியம் மீது மட்டக்களப்பில் அதிரடி!

## நான்கு சிப்பாய்கள் பலி!!

மட்டக்களப்பு சந்திர மலைப்பகுதியில் இராணுவத்தினருக்கு எண்ணெய்விநியோகம் செய்யும் களஞ்சியம் ஒன்றின் மீது நேற்று அதிகாலை விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித்தாக்குதலில் நான்கு இராணுவச் சிப்பாய்கள் உயிரிழந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் மேலும் பல படையினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 பிரிகேடியர்களின் தலைமையில் 51, 52-வது படையணிகள் போரில்

## றோஹான் தளுவத்த நெறிப்படுத்துகிறாராம்

யாழ். நகரை நோக்கி தற்போது மேற்கொள்ளப் பட்டுவரும் பெரும் எடுப்பிலான படைநடவடிக்கையை மேஜர் ஜெனரல் றோஹான் தளுவத்த வழிநடத்தி வருவதாகவும், மேஜர் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய அவருக்கு உதவியாகச் செயற்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

வலி. கிழக்குப் பகுதியில் முன்னேறிச்செல்லும்51ஆவது படைப்பிரிவுக்கு பிரிகேடியர் நீல்டயசும், பிரிகேடியர் சரத் பொன்சேகாவும் தலைமை வகித்து வழிநடத்தி வருகின்றனர்.

இந்தப்படைப் பிரிவு விடுதலைப்புலிகளின்கடும் எதிர்ப்பையும், மிதிவெடிகளையும் சந்தித்திருப்பதாகவும் —

கண்ணிவெடிகள் காரணமாக இப்பகுதியில் படையினர் மிக மெதுவாகவே முன்னேறிச்செல்ல முடிந்ததாகவும் ஸ்ரீலங்கா வானொலி தெரிவித்தது.

வலிமேற்குப் பகுதியில் முன்னேறிச்செல்லும் 52 ஆவது படைப் பிரிவுக்கு பிரிகேடியர் அன்ரன் விஜயேந்திராவின் உதவியுடன் பிரிகேடியர் பி. ஏ. கருணாதிலக தலைமை வகித்துச்செல்வதாகவும் அறிவிக்கப்பட்டது. (ஐ)

## தமிழீழ வைப்பக யாழ். கிளை கச்சாய் வீதியில்

யாழ்ப்பாணம், நவ. 15

தமிழீழ வைப்பகத்தின் யாழ். கிளை சாவகச்சேரி கச்சாய் வீதியில் இயங்கிவருகின்றது.

தமிழீழ வைப்பகத்தின் சகல பணி நிலைகளுக்குமாக அண்மையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அவற்றுக்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டிருப்பதாக வைப்பக பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்ப இறுதித் தினம் கடந்த 5 ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

## யாழ். வங்கிக் கிளைகள் பல பருத்தித்துறையில் இயங்கும்

பருத்தித்துறை, நவ 15

வலிகாமத்தில் இயங்கிய பல்வேறு வங்கிகளின் கிளைகள் பருத்தித்துறையில் இயங்கவுள்ளன.

ஹட்டன் நஷனல் வங்கியின் யாழ். கிளை, கொமேர்ஷல் வங்கியின் யாழ். கிளை, இலங்கை வங்கியின் யாழ். ஆஸ்பத்திரி வீதிப் பிரதான கிளை ஆகியனவே பருத்தித் துறையில் இயங்கவிருக்கின்றன.

இலங்கை வங்கியின் ஏனைய கிளைகள் வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் பல்வேறு இடங்களிலும் இயங்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஹட்டன் நஷனல் வங்கியின் யாழ். கிளை எதிர்வரும் திங்கட்கிழமை அளவில் பருத்தித்துறையில் செயற்படஆரம்பிக்கும் என்று எதிர் பார்க்கப்படுவதாக அவ்வங்கியின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொமேர்ஷல் வங்கியும் தனது செயற்பாட்டை பருத்தித்துறையில் விரைவில் ஆரம்பிக்கவிருக்கின்றது. மந்திகைச் சந்தியில் உள்ள வங்கியின் தற்காலிக பணிமனை அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து வருகிறது. [உ-ஐ]

## யாழ். போதனா ஆஸ்பத்திரி நேற்று மந்திகையில் இயங்க ஆரம்பித்தது

யாழ்பாணம், நவ. 15

யாழ். போதனா வைத்தியசாலை நேற்று முதல் மந்திகையில் உள்ள ஆதார வைத்தியசாலையில் இயங்க ஆரம்பித்தது.

யாழ். ஆஸ்பத்திரியில் சிகிசசை பெற்றுவந்த நோயாளர் அங்கு இடம்மாற்றப்பட்டுள்ளனர்.

மருந்துவகைகளும். வைத்திய உபகரணங்களும் ஏற்கனவே பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.

யாழ். ஆஸ்ப்பத்திரியில் எஞ்சியிருந்த பொருள்கள் நேற்றுக் காலை பருத்தித் துறைக்கு எடுத்துக் செல்லப் பட்டன.

யாழ். ஆஸ்பத்திரியில் தங்கியிருந்த வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும் டாக்டர்கள் ஆகியோர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் நேற்று பருத்தித்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

யாழ் ஆஸ்பத்திரி அங்கு முழுமையாக இயங்க இன்னும் ஒரிரு தினங்கள் செல்லும் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

டாக்டர்கள், தாதிமார். தொழில்நுட்பவியலாளர்கள், சிற்றூழியர்கள் என்று ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமானோர் தத்தம் கடமைகளுக்கு நேற்றுச் சமுகமளித்திருந்தனர்.

வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு, வார்ட்டுகள், மருந்தகம், மருந்து கட்டும் பகுதி போன்ற பல்வேறு பிரிவுகளிலும் போதனா வைத்தியசாலைப் பணியாளர்களும், மந்திகை வைத்தியசாலைப் பணியாளர்களும் இணைந்து பணிகளில் ஈடுபட்டிருந்தனர். (ஐ-3-173)

## வலிகாமம் ப. நோ. கூ. சங்கங்கள் தென்மராட்சியில் இயங்குகின்றன

### பல இடங்களில் கிளைகளும் திறப்பு

தென்மராட்சி, நவ. 15

வலிகாமம் பகுதியிலிருந்து இடப்பெயர்ந்துள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் அதன் கிளைகளும் தென்மராட்சிப் பகுதியில் இயங்கத் தொடங்கியுள்ளன.

தெல்லிப்பளை ப.நோ கூ. சங்கம் மட்டுவில் வடக்கு மோகனதாஸ் ச ச. நிலையத்திலும் —

அச்சுவேலி ப.நோ.கூ. சங்கம் சரசாலை கிராம சபை மண்டபத்திலும் —

நீர்வேலி ப.நோ.கூ. சங்கம் மீசாலை புத்தூர் சந்தி வேம்பிராய் வீதியில் உள்ள ச.ச. நிலையத்திலும் —

யாழ்ப்பாணம் ப.நோ கூ. சங்கம் சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தின் முன்பாகவும் —

சுன்னாகம் ப.நோ கூ. சங்கம் சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயத்திலும் —

ஊர்காவற்துறை ப. நோ. கூ.சங்கம்சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடியிலும்—

புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கம் கெற்பலி பண்டிதர் குடியிருப்பிலும் —

வேலணை ப. நோ. கூ. சங்கம் சாவகச்சேரி ப. நோ கூ. சங்கம் முன்பாகவும்—

சங்கானை ப. நோ. கூ. சங்கம் மிருசுவில் உசன் பொது நூலகத்திலும் —

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கம் பளை ப. நோ. கூ. சங்க மண்டபத்திலும் —

அளவெட்டி ப. நோ. கூ. சங்கம் பளை பிரதேச சபை மண்டபத்திலும்—

காரைநகர் ப. நோ. கூ. சங்கம் கொடிகாமம் ப. நோ. கூ. சங்க மேல்மாடியிலும் —

பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம் மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள கட்டட மெல்மாடியிலும் இயங்கி வருகின்றன.

இச் சங்கங்களின் கிளைகள் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் வீடுகள், பொது அமைப்புகளின் கட்டடங்களிலும், தற்காலிக கொட்டில்களிலும் இயங்கி வருகின்றன. (ஐ-117)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுகழகம் வீடுகளை அமைக்க உதவும்

தென்மராட்சி, பச்சிலைப் பள்ளி, வடமராட்சி ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள வலிகாமம் பகுதி மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் வீடுகளை அமைத்து வழங்கவுள்ளனர்.

இவ்வீடுகள் தெருவோரத்திலும், மரநிழலிலும் தங்கியுள்ள மக்களுக்கு முதற்கட்டமாகவும்—

முகாம்களிலும் ஆலயங்களிலும் தங்கியுள்ள மக்களுக்கு இரண்டாவது கட்டமாகவும்—

உறவினர் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ள மக்களுக்கு மூன்றாவது கட்டமாகவும் வழங்கப்படும்.

மேற்படி இடங்களில் தங்கியுள்ள மக்கள் தென்மராட்சி பச்சிலைப்பள்ளி, வடமராட்சிப் பகுதிகளில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கிளைகளுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வீடு அமைக்கக்கூடிய காணிகள்பற்றித் தெரிவித்தால் அக்காணிகளில் வீடுகள் அமைத்துத் தரப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## வெளிநாட்டு பிரதிநிதிகள் முகாம்களுக்கு விஜயம்

தென்மராட்சி, நவ. 15

யாழ்ப்பாணத்தில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் தென்மராட்சிப் பகுதியில் உள்ள நலனோம்பு நிலையங்களைப் பார்வையிட்டனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைச் சேர்ந்த டாக்டர் பயஸ். அகதிகளுக்கானஐ நா தூதரகத்தைச் சேர்ந்த பாப்ரோ, பிரான்ஸ் மருத்துவக் குழுவைச் சேர்ந்த டாக்டர் மாரி, சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த பற்றிக் ஆகியோரே இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள இடங்களை நேரில் சென்று பார்வையிட்டனர்.

தென்மராட்சி பகுதியில் நிவாரணப் பணிகளில் ஈடுபடும் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் அவர்கள் சந்தித்தனர். (ஐ-117)

## புலிகளின் குரல் தொடர்பகங்கள்

'புலிகளின் குரல்' வானொலி தொடர்பகங்கள் சாவகச்சேரி. மிருசுவில், நெல்லியடி ஆகிய இடங்களில் இயங்குவதாக ''புலிகளின் குரல்'' நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

தகவல்களை வழங்க விரும்புவோர் இந்த தொடர்பகங்களுடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-3]

## கெயர் அலுவலகம் இடமாற்றம்

சர்வதேச கெயர் நிறுவன பிராந்தியஅலுவலகம் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை பிரதான வீதியில் முதலாம் கட்டைச்சந்திக்கு அருகில் இடமாற்றம் செய்யப் பட்டு இயங்குகிறது. (ஐ-173)

## வடமராட்சியில் போர் எழுச்சி பிரசாரம்

வடமராட்சி, நவ. 15

வடமராட்சிப் பகுதியில் போர்க்கால எழுச்சி வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

அதனையொட்டி இங்குள்ள பிரதான சந்திகளில் ஒலிபெருக்கிகளில் போர்ப்பிரகடனம் தொடர்பான எழுச்சி உரை ஒலிபரப்பப்பட்டு வருகின்றது. அத்துடன் வீதிகள் தோறும் வாகனங்களில் ஒலிபெருக்கி மூலம் எழுச்சிப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ஐ-173)

## முதியோர் இல்லத்திற்கு பாய்கள்

கைதடி முதியோர் இல்லம் முதியோர்களால் நிரம்பிவழிகின்றது. வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த முதியோர்கள் அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சுமார் நானூறு முதியோர்கள் அங்கு தங்கியுள்ளனர். இவர்களில் 210 பேருக்கு தமிழர் புனர்வாழ்வு கழகத்தினர் பாய்களை வழங்கியுள்ளனர். (ஐ-117)


## அவசர அழைப்பு

தாவடி மானிப்பாய் சாலையில் இதுவரை இயங்கி வந்த

அளவை இனிப்புத் தொழிலகம்

கீழ்க்காணும் முகவரியில் தொடர்ந்து இயங்க வேண்டி இருப்பதால் ஊழியர்கள் அனைவரையும்18-11-95ஆம் திகதிக்கு முன்னர் சமுகமளிக்குமாறு கேட்டுகொள்கின்றோம்.

அளவை இனிப்புத் தொழிலகம்

"சன் பிறான்ட்"

வீரவாகு கட்டடம், பருத்தித்துறை

(39196)



## தேடுகின்றார்கள்

சில்லாலை, பண்டத்தரிப்பைச் சேர்ந்த

திருமதி கோவிந்தபிள்ளை நாகரெத்தினம்

என்பவரை அவரது சகோதரனான சிறிஸ்கந்தராஜா [யாழ். நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ் ஊழியர்] என்பவர் தேடுகின்றார். அவர் எங்கிருந்தாலும் மட்டுவில் கிழக்கு, பனிக்கவளவு எனும் முகவரியில் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

[39198]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதயன்

### தூங்காதிர்!

யாழ்ப்பாண நகரத்தை நோக்கி ஸ்ரீலங்கா இராணுவம் முன்னேறி வருகிறது. இன்றோ, நாளையோ அது யாழ். நகரத்தை முற்றாக ஆக்கிரமித்துவிடவும் கூடும்.

அதன் பின்னர் வடக்கில், தமிழீழத்தில் பெரும் போர் ஒன்று மூளும். அந்தப் பெருஞ் சமரில் வெற்றி யாருக்கு என்பதனை இப்போது நிச்சயமாகக் கூறமுடியாது.

எப்படியோ, யாழ்ப்பாண நகரத்தை ஆக்கிரமிப்பதோடு மட்டும் ஸ்ரீலங்கா அரசபடைகள் திருப்தி அடையப் போவதில்லை; போரை நிறுத்தப் போவதில்லை. வடதமிழீழம் முழுவதையும் ஆக்கிரமிக்கும் பொருட்டு முழு அளவிலான போரை நடத்துவதே அரசின் உள்ளார்ந்த நோக்கம்.

இதனைத் தமிழ் மக்களில் மிகப் பெரும் எண்ணிக்கையினர் அறியாதவர்களாக இருக்கிறார்கள்.

மேலும்—

நாம் இவ்வாறு இடத்துக்கு இடம் எத்தனை காலத்துக்கு ஓடிக்கொண்டிருக்கப் போகிறோம்? நாங்கள் ஓடுகிறோம் என்பதற்காக இராணுவம் போரை நிறுத்திவிடுமா? — என்று சற்று பகுத்தாய்ந்து சிந்திக்கும் சுபாவம் எம்மில் பலருக்கும் மிகக் குறைவு.

இராணுவம் அப்பாவித் தமிழ்ப் பொது மக்களை மூர்க்கத் தனமாகக் கொன்றொழித்து வருவதைக் கண்ணாரக் கண்ட பின்னரும், அரசாங்கம் பேச்சுவார்த்தை மூலம் தமிழர் உரிமைகளை வழங்கும் என்று நப்பாசை கொள்வோரும் நம்மிடையே உள்ளனர்.

தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்கு போருக்கு முகங்கொடுத்தாக வேண்டிய தவிர்க்க முடியாத —கட்டாய—நிலையில் உள்ளனர்; போராட வேண்டிய நிலையில் உள்ளனர்.

இத்தகைய ஒரு நெருக்கடியான, வாழ்க்கையின் இக்கட்டான கட்டத்துக்கு வந்த பின்னரும், எதிரி எமது உயிரை கொய்து செல்ல வாசலுக்கு வந்த பின்னரும்—

போராட்டம் ஒரு புறம் நடக்கும்; நாம் ''எம்பாட்டில்'' வாழ்வோம் என்ற போக்குடன் பலரும் நாட்களைக் கழிக்க முயல்கிறார்கள்.

யதார்த்தத்துக்குப் புறம்பான இத்தகைய நிலைப்பாட்டில் இருந்து நாம் எப்போது விடுபடுகிறோமோ, அப்போதுதான் இடம்பெயரும் அவலத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கலாம்.

லட்சக் கணக்கான சிங்கள இளைஞர்கள் திரண்டு இராணுவமாக வந்து தமிழ் மண்ணை ஆக்கிரமிக்கவில்லை. பல்லாயிரக்கணக்கில் தான் வட தமிழீழத்தில் துருப்புகள் குவிக்கப்பட்டுள்ளன. அதே எண்ணிக்கையில் — பல்லாயிரக்கணக்கில் — தமிழ் இளைஞர், மகளிர் போர்க்களம் புகுந்தால், விடுதலைப் புலிகளுடன் இணைந்தால், இராணுவ ஆக்கிரமிப்பை இலகுவில் தடுத்து விடலாம். இதுவே உண்மையும், யதார்த்தமும் ஆகும்.

இதனைத் தமிழ் இளைஞர்களும் மகளிரும் உணர வேண்டும். தொடர்ந்து ''இடம் பெயர்ந்தவர்கள்'' என்ற 'லேபலை' ஒட்டிக் கொண்டு ஓடித் திரிவதை நிறுத்தி, போராட்டத்தில் இணைய வேண்டும்.

இளைய சமுதாயமே இனியும் தூங்காதே! போராட்டத்தில் இருந்து ஒதுங்கி நின்றால் நீயும் உன் சந்ததியும் அழிவது நிச்சயம். அதனை மறந்துவிடாதே!

# யாழ். நிலை பற்றி தினமும் ஜெனிவாவுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 15

குடாநாட்டில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் அனுபவிக்கும் அவலங்கள், கஷ்டங்கள் குறித்த தகவல்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து ஜெனிவாவில் உள்ள ஐ. நா. அலுவலகத்துக்கு தினமும் அனுப்பப்பட்டு வருகின்றன.

குடாநாட்டில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு சர்வதேச அமைப்புக்கள் உதவவேண்டும் என்று ஐ. நா. செயலாளர் நாயகம் விடுத்த கோரிக்கைக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு பிரசாரம் செய்துவருகிறது.

குடாநாட்டு மக்கள் படும் இன்னல்களை மூடிமறைக்கும் இத்தகைய முயற்சிகளை அடுத்து உண்மை நிலையை உடனுக்குடன் அறிவிக்குமாறு ஜெனிவாவில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. அலுவலகம் அதன் யாழ். அலுவலகத்தை கோரியுள்ளது.

மக்களின் இடம்பெயர்வு அவலங்கள், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள உணவு, இருப்பிட, சுகாதாரப் பிரச்சினைகள் பற்றிய தகவல்கள் ஆகியவை குறித்து இரு தடவைகள் கொழும்பு அலுவலகம் ஊடாக ஜெனிவாவுக்கு தகவல் அனுப்பப்பட்டுவருகிறது. (ஐ-3)

## புதிய இடங்களில் பிரதேச செயலகங்கள்

தென்மராட்சி, நவ. 15

வலி. மேற்கு (சங்கானை) பிரதேச செயலகம் மிருசுவில் கிராம சபை அலுவலகக் கட்டடத்திலும்—

வலி. கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலகம் சாவகச்சேரி இலங்கை வங்கிக்கு அருகில் உள்ள கட்டடத்திலும் இன்று புதன்கிழமை தொடக்கம் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## தவறவிட்ட பொருள்கள்

வலிகாமம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துவந்த மக்களால் தவறவிடப்பட்ட பல பொருள்கள் சாவகச்சேரி காவல்துறைப் பணிமனையில் பொதுமக்களால் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உடுபுடைவைப் பொதிகள், அடையாள அட்டைகள், சுடுநீர் போத்தல்கள் வானொலிப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் என்பன அவற்றுள் அடங்கும். (ஐ-117)

# தமிழர் புனர்வாழ்வு கழக பராமரிப்பில் 182 இடம்பெயர்ந்தோர் முகாம்கள்

தென்மராட்சி, நவ. 15

வலிகாமம்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்காக தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 265 நலனோம்பு நிலையங்களில் 182 நிலையங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் பராமரித்து வருகின்றனர்.

இந்த 182 நலனோம்பு நிலையங்களில் 17 ஆயிரத்து 11 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 482 பேர் தங்கியுள்ளனர்.

இந்நிலையங்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த 335 தொண்டர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

தென்மராட்சிப் பிரிவில் 150 நிலையங்களும், பச்சிலைப்பள்ளிப் பகுதியில் 24 நிலையங்களும், வடமராட்சி பகுதியில் 8 நிலையங்களுமே தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. (ஐ-117)

## புதிய அரசமைப்பு நகல் செவ்வாயன்று சமர்ப்பிப்பு

கொழும்பு, நவ. 15

தற்போதுள்ள அரசமைப்பை மாற்றுவதற்கான நகல் அரசமைப்பு எதிர்வரும் 21 ஆம் திகதி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதம் நடைபெறும்போது அரசமைப்பு நகல் சமர்ப்பிக்கப்படும்.

நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் புதிய அரசமைப்பு நகலை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிப்பார்.

புதிய அரசமைப்பு நகல் சட்டவரைஞரால் ஏற்கனவே வரையப்பட்டுள்ளது- (ஐ)

## மக்கள் வங்கி கிளைகள் சாவகச்சேரியில் இயங்கும்

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ். நகரில் இயங்கி வந்த மக்கள் வங்கியின் 4 கிளைகள் இன்று முதல் சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் இயங்கவிருக்கின்றன.

கன்னாதிட்டி, நவீன சந்தை, ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை ஆகிய கிளைகளே இன்று முதல் இயங்கவிருக்கின்றன.

காலை 9 மணி முதல் 11 மணிவரை மட்டும் படுத்தப்பட்ட அளவில் சேவையாற்றவிருக்கும் இக் கிளைகளில் நடைமுறை, சேமிப்பு கணக்கு பணிகளும், நிரந்தர வைப்பு மற்றும் வங்கிக்கட்டளைகள் வழங்கல் ஆகிய பணிகளும் இடம்பெறும் என்று பிராந்திய முகாமையாளர் திரு. இ. அருளானந்தன் தெரிவித்தார்.

கிளைகள் இயங்கும் தினங்கள் வருமாறு:-

★ திங்கள், புதன் — கன்னாதிட்டி கிளை.

★ செவ்வாய், வியாழன்— நவீன சந்தைக் கிளை.

★ வெள்ளி — காங்கேசன் துறை, ஊர்காவற்துறை கிளைகள். [ஐ-3]

## வடக்குபடையினருக்குஉதவ தென்பகுதி டாக்டர் குழு

கொழும்பு, நவ. 15

வடக்கு-கிழக்கில் போரில் ஈடுபட்டுள்ள படையினருக்கு சிகிச்சை அளிக்க டாக்டர்கள் குழு ஒன்றுமுன்வந்துள்ளதாக ஸ்ரீலங்கா வானொலி அறிவித்துள்ளது.

போரில் காயமுறும் படையினரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதையடுத்து, அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் பணியில் இந்த டாக்டர்கள் குழு ஈடுபடுத்தப்படவிருக்கிறது.

அம்பாறை, யாழ்ப்பாணம் பகுதிகளில் இந்தக்குழுசெயற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## வலிகாமம் பகுதிகளில் இருந்து திருடப்பட்ட பொருள்கள் காவல்துறையால் மீட்பு!

தென்மராட்சி, நவ. 15

வலிகாமம் பகுதியில் இருந்து மக்கள் கையில் அகப்பட்ட பொருள்களுடன் இடம்பெயர்ந்த வேளையில் அப்பகுதியில் உள்ள வீடுகள், ப.நோ.கூ. சங்கக் கிளைகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றில் தமது கைவரிசையைக் காட்டிய திருடர்கள் ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த காவல்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் அகப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து மீட்கப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரம், வானொலிப் பெட்டிகள், பெற்றோமாக்ஸ் விளக்கு, பெருமளவு உணவுப் பொருள்கள், உடுபுடைவைகள் சாவகச்சேரி காவல் பணிமனையில் வைக்கப்பட்டுள்ளன.

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளில் திருடப்பட்ட பொருள்களில் ஒரு பகுதி மீட்கப்பட்டு ப.நோ.கூ. சங்கத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கொட்டடியில் உள்ள மதுபான நிலையத்தில் இருந்து திருடப்பட்ட மதுபானங்களில் ஒரு பகுதி மீட்கப்பட்டு அச்சங்கத்தின் பொது முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இத் திருட்டுக்கள் தொடர்பாகப் பலர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். புலன் விசாரணைகள் நடைபெற்று வருவதால் திருடப்பட்ட மேலும் பல பொருள்கள் மீட்கப்படலாமென நம்பப்படுகிறது. (ஐ-117)

## மருந்தகங்களின் முன்பும் மக்கள் கியூவில் காத்திருப்பு

செம்பியன்பற்று, நவ. 15

பாண் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்காக மட்டுமன்றி மருந்து வகைகளை வாங்குவதற்கும் மருந்தகங்களின் முன்னால் மக்கள் நீண்ட கியூவில் நிற்க வேண்டிய கஷ்டநிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

லட்சக்கணக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களிடையே பல்வேறு தொற்று நோய்கள் பரவி வருகின்றன. ஆஸ்பத்திரிகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளால் அங்கு சிகிச்சை பெறமுடியாத மக்கள் தனியார் மருந்தகங்களுக்கும், சிகிச்சை நிலையங்களுக்கும் படையெடுத்து வருகின்றனர்.

இதனால் மருந்து வகைகள் குளிகை வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில மருந்து வகைகள் முற்றாகத் தீர்ந்து போயுள்ளன. (ஐ-36)

## ஜேர்மன் செல்ல முயன்ற 121 இலங்கையர் கைது!

ரோம், நவ. 15

ஜேர்மனிக்குச் செல்வதற்காக சரக்குக் கப்பல் ஒன்றில் சென்றுகொண்டிருந்த 121 இலங்கையர்களை இத்தாலி கரையோரத்தில் வைத்து இத்தாலி பொலீஸார் கைதுசெய்தனர்.

நேபாளத்தில் வைத்து சரக்குக் கப்பலில் ஏற்றப்பட்ட இவர்கள் சட்டவிரோதமாக ஜேர்மனிக்கு அழைத்துச் செல்லப்பட்ட வழியில் கைதாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மனி செல்வதற்கென தலா 3 ஆயிரம் டொலர்களை தாம் பயண முகவர் ஒருவரிடம் செலுத்தியதாக கைதான இலங்கையர்கள் தெரிவித்தனர்.

இன்னும் இருவர் [illegible] இலங்கைக்குத் திரும்பிச் சென்றுவிடுமாறு [illegible] தெரிவித்துள்ளனர். (ஐ-3)

## காலையும், மாலையும் குறித்த நேரத்தில் பாணை விற்பனை செய்ய ஏற்பாடு

சகலருக்கும் பாண் கிடைக்க உதவும் வகையில் பாண் விற்பனை செய்யும் புதிய நேரங்கள் இன்று முதல் அமுலுக்கு வருகின்றன.

யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் கூட்டம் நேற்று சாவகச்சேரியில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் இது பற்றிய முடிவு எடுக்கப்பட்டது.

வெதுப்பகங்களில் வைத்து காலை 6-30 மணிக்கும், மாலை 4 மணிக்கும் பாண் விற்பனை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று வெதுப்பக உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உற்பத்தி செய்யப்படும் பாணை முன்னர் போன்று கடைகளுக்கு வழங்க வேண்டும் என்றும் —

அவ்வாறு வழங்கி எஞ்சிய பாணையே வெதுப்பகங்களில் வைத்து விற்பனை செய்யும் படியும் — வெதுப்பக உரிமையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-3)

[illegible] noolaham.org | aavanaham.org

# வந்தாறுமூலையில் இரு படையினர் பலி!

யாழ்ப்பாணம், நவ. 15

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ரோந்து அணி மீது விடுதலைப் புலிகள் நேற்று தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை நடந்த இத்தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டதாகவும் மற்றும் இரு படையினர் காயமடைந்ததாகவும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது

இதேவேளை—

இத்தாக்குதல் பற்றிய முழு விவரங்களும் கிடைக்கவில்லை என "புலிகளின் குரல்" வானொலி நேற்றிரவு அறிவித்தது. (உ-3)

# தற்கொலைத் தாக்குதலை எவருமே தடுக்க முடியாது!

## கொழும்பு பொலிஸ் அதிகாரி கூறுகிறார்

கொழும்பு நவ. 15

குண்டுகளைத் தாங்கிய தற்கொலையாளியின் தாக்குதல்களை பொலிஸாரால் மட்டுமல்ல வேறு எவராலுமே கூடத் தடுக்க முடியாது.

கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜி.பி. கொட்டகதெனிய இவ்வாறு கூறியிருக்கிறார்.

பி. பி. ஸி செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோவுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

கொழும்பு நகரின் பாதுகாப்புக் குறித்து பொலிஸார் எந்நேரமும் உஷாராகவே உள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தற்போது முடுக்கி விடப்பட்டுள்ளன. எனினும் குண்டுகளைக் கட்டி வந்து தற்கொலைத் தாக்குதல் நடத்துவதைத் தடுக்க முடியாது.

ஏனெனில் கொழும்புக்கு வரும் அனைத்து மக்களையும் உடற்பரிசோதனைக்கு உட்படுத்த எவராலும் இயலாது. எனவே நாங்கள் மக்களின் உதவியை நாடியுள்ளோம்.

மதகுருமார்களாக, வர்த்தகர்களாக, புகைப்படப் பிடிப்பாளர்களாக கொழும்பில் விடுதலைப் புலிகள் நடமாடி வருகின்றனர்.

—இவ்வாறு கொட்டகதெனிய மேலும் தெரிவித்தார். (ஐ-6)

## பாதுகாப்பு வலயத்தை பேணுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பகுதியில் தொடர்ந்து பாதுகாப்பு வலய விதிகளை மதித்துச் செயற்படுமாறு –

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பாதுகாப்பு அமைச்சையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் கேட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் எஞ்சியிருக்கும் வைத்திய உபகரணங்களைக் காப்பாற்றவும், ஆஸ்பத்திரிச் சூழலில் உள்ள மக்கள் பாதிக்கப்படாமல் இருக்கவும் பாதுகாப்பு வலய விதிகளுக்கு மதிப்பளிக்குமாறு இரு தரப்பாரிடமும் கேட்கப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை—

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகம் நேற்றுடன் மூடப்பட்டது இந்த அலுவலகம் நேற்று முதல் பருத்தித்துறையில் இயங்குகிறது.

## தி. மு. கழகம் மகஜ

புதுடில்லி, நவ. 15

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் கண்மூடித்தனமான விமானக்குண்டு வீச்சு மற்றும் ஷெல் வீச்சினால் கொல்லப்படுவதைத் தடுக்க உதவுமாறு—

திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியப் பிரதமர் நரசிம்மராவிடம் கேட்டுள்ளது

பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றிலேயே இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

## படையினர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேரி வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டன.

மற்ற மீனவரான பேர்க்மன் (36 வயது) என்பவர் பற்றிய தகவல் நேற்று மாலை வரை கிடைக்கவில்லை.

இவர்கள் மீன் பிடிக்கச் சென்ற படகும், அவர்களின் மீன்பிடி உபகரணங்களும் காணாமற்போயுள்ளன.

# மக்கள் இல்லாத யாழ்ப்பாணத்தில் செஞ். குழுவின் பணி தேவையற்றது!

## இடம் மாறியது குறித்து ஜெனிவாவில் அறிவிப்பு

லண்டன், நவ. 15

"பொதுமக்கள் எவரும் இன்றி வெறுமையாக இருக்கும் யாழ்ப்பாணத்தில் எமது சேவை தேவையில்லை என்ற காரணத்தால் அங்கு இருந்து வாபஸ் பெற்றோம்".

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரியான மார்க்கோ அல்தர் ஜெனிவாவில் வைத்து பி. பி. ஸிக்கு தகவல் வெளியிடுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண நகரில் இருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அலுவலகம் வாபஸ் பெற்றமை குறித்து விளக்குகையில் அவர் இப்படிக் கூறினார்.

யாழ். குடாநாட்டில் மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து வெறுமையாக காட்சியளிக்கும் ஓர் இடத்தில் நாம் பணியாற்றுவது தேவையற்றது.

அங்கு இயங்கும் ஆஸ்பத்திரியின் சேவையும் தேவையற்றதாகிவிட்டது. அதனால் அந்த ஆஸ்பத்திரியை இடம் மாற்றினோம் நாமும் பருத்தித்துறைக்கு சென்றோம் —

அடுத்த சில நாட்களில் யாழ்ப்பாணத்தில் பெரும் சண்டை ஒன்று நடைபெறும் வாய்ப்பு உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜெனிவாவில நேற்று அவர் செய்தியாளர் மகநாடு ஒன்றையும் நடத்தினார்.

## யாழ். நகரைத் தாக்கினால் அகதிகள் எண்ணிக்கை கூடும் என எச்சரிக்கை

### செஞ்சிலுவைக்குழு அறிவிப்பு

கொழும்பு, நவ. 15

யாழ் நகர் மீது ஸ்ரீலங்கா இராணுவம் தாக்குதலை நடத்தும்போது அங்கிருந்து வெளியேறும் அகதிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு எச்சரித்திருக்கின்றது.

யாழ். நகர் மீது இராணுவம் தாக்குதலை ஆரம்பித்தால் அகதிகளின் நிலைமை மேலும் மோசமடையும்.

மோதல்களில் இருந்து தப்புவதற்காக ஏற்கனவே வெளியேறியுள்ள சுமார் இரண்டரை லட்சம் தமிழ் மக்கள் புதிதாக மோதல்கள் ஆரம்பித்தால் கிளாலி நீரேரியைக் கடந்து வெளியேறவேண்டி ஏற்படலாம் என்றும் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ-உ-6)

## மாஹோ இன்று வரும்

மண்ணெண்ணெய், மற்றும் உரம் மா ஆகியவற்றுடன் "மாஹோ" கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையில் மா ஏற்றுவதில் ஏற்பட்ட தாமதத்தால் இக்கப்பல் எதிர்பார்த்தபடி நேற்று வந்து சேரவில்லை

இதேவேளை —

பருத்தித்துறையில் மா இறக்கும் பணியை முடித்துக் கொண்டு 'ஹபறண' கப்பல் நேற்று திருகோணமலைக்குத் திரும்பியது. (ஐ-3-173)

## மரண அறிவித்தல்கள்

### தருமலிங்கம் சுகந்தன்

நல்லூர், சங்கிலியன் வீதியை பிறப்பிடமாகக் கொண்ட த. சுகந்தன் [ஆட்டோ சாரதி] நேற்று மாலை அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற தருமலிங்கம் - துரையம்மா தம்பதிகளின் அன்பு மகனும், ரூபன். ரஞ்சித், சுதர்சன் ரெஜீனா [சுவிஸ்], சுகந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மாலை 10 மணியளவில் மருதங்குளம் சின்னத்துரையின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ரூபன்
[சகோதரன்]

தற்போதைய முகவரி:
மட்டுவில் தெற்கு.
சாவகச்சேரி.

[39199]

### சுப்பையா துரைராஜா

(யாழ் நீராவியடி
கடையிற் சுவாமி கோவில் தர்மகர்த்தா)

யாழ். நீராவியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நாவலர் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான சுப்பையா துரைராஜா நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், சிறிஸ்கந்தராஜா [நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ் ஊழியர்] திருமதி கோவிந்தபிள்ளை நாகரெத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மட்டுவில் கிழக்கு பனிக்கவளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று நண்பகல் 12 மணியளவில் மட்டுவில் வேம்பிராய் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிறிஸ்கந்தராஜா
(மகன்)

நிரந்தர முகவரி:
198/6, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

த.போ.முகவரி:
மட்டுவில் கிழக்கு,
பனிக்கவளவு.

(39197)

## தொண்டு நிறுவன...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோரியும் —

பாதிக்கப்பட்டுள்ள வடபகுதி மக்களுக்கு உரிய நிவாரணங்களையும்புனர்வாழ்வுக்கான உதவிகளையும் வழங்காமல்இருப்பதோடு,தொண்டர் நிறுவனங்கள் அவற்றை வழங்குவதையும் தடுக்கும் விதத்தில் செயற்பட்டுவரும் ஸ்ரீலங்கா அரசின் போக்கைக் கண்டித்தும் —

இக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட விருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டம் குறித்து தென்னிலங்கைப் பத்திரிகைகள் இனவாதப்போக்கில் செய்திகளை வெளியிட்டிருந்ததாகவும் தெரியவருகின்றது.

புலிகளுக்கு உதவி வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் கூட்டம் இதுவெனத் தெரிவித்து லண்டன் நகர சிங்கள அமைப்பு ஒன்று விடுத்திருந்த அறிக்கை தென்னிலங்கைப் பத்திரிகை ஒன்றில் வெளியாகியிருந்தது

புலிகளுக்கு உதவிவரும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களை அழைத்து இக்கூட்டத்தை [illegible] லேக் ஹவுஸ் பத்திரிகைகள் நேற்று செய்தி வெளியிட்டிருந்தன.

இதனை அடுத்தே சம்பந்தப்பட்ட ஹோட்டலுக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

தமிழர்களின் உரிமைகளுக்காக அவ்வப்போது குரல் எழுப்புபவர் எனக் கருதப்படும் "யுக்திய" பத்திரிகையின் ஆசிரியரும் ஆர்ப்பாட்டக்காரர்களால் நையப் புடைக்கப்பட்டார்.

சந்திரிகாவுடன் சேர்ந்து நாட்டைப் பிரிக்க முயலும் அவரையே இதுவரை காலமும் தாங்கள் தேடித்திரிந்ததாகக் கூறி ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரைத் தாக்கினர். அவர் தப்பி ஓடி, அங்கு வந்த இராணுவ டிரக் ஒன்றில் பாய்ந்து ஏறி உயிர் தப்பிக்கொண்டார்.

களுத்துறை, கொழும்பு ஆகிய இடங்களில் இருந்து எதிர்க்கட்சி எம். பி. ஒருவரினால் திரட்டப்பட்டு கூட்டி வரப்பட்டோரே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகின்றது.

எனினும் சம்பந்தப்பட்ட கூட்டம் தடையின்றி நடைபெறுவதற்கு பூரண பாதுகாப்பு வழங்கப்படும் என ஸ்ரீலங்கா அரசு அறிவித்துள்ளது. (உ-3-6)

## தாஜ் சமுத்திரா ஹோட்டல் சேதம்

கடந்த 11 ஆம் திகதி இராணுவ தலைமையகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் அருகில் உள்ள தாஜ் சமுத்திரா ஹோட்டல் சேதமடைந்தது.

## மிகப்பெரும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குதலுக்கு தயாராகி வருவது பற்றிய செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

எதிர்வரும் நாட்களில் இராணுவம் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் என சர்வதேச செய்தி நிறுவனங்களும் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் —

வடபகுதியில் படையினர் தாம் புதிதாகக் கைப்பற்றிய பகுதிகளில் உள்ள பொதுமக்களின் வீடுகளையும் பயிர்ச் செய்கைகளையும் புல்டோஸர் கொண்டு அழித்து நாசமாக்கி வருவதாக விடுதலைப் புலிகள் நேற்று லண்டனில் விடுத்த அறிக்கை ஒன்றில் குற்றம் சாட்டியிருக்கின்றனர். [உ-3-6]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கிலுள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 15-11-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org